SENTAMIL COLLEGE
5265
MADURAI

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

20 ஆம் ஆண்டு அறிக்கை



தொகுதி 1

1985

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

20 ஆம் ஆண்டு அறிக்கை

1985

தொகுதி - I

ஆண்டறிக்கை 1985

தொகுதி - I

உள்ளடக்கம்

இயல்		பக்கம்
I	பொதுக் கணிப்பு	— 1
II	பல்கலைக்கழகத் துறைகளும் இணைவிக்கப்பெற்ற கல்லூரிகளும்	— 13
III	ஆய்வு நடவடிக்கைகள்	— 25
IV	வளாக வசதிகள்	— 34
V	வளர்ச்சி நடவடிக்கைகள்	— 35
VI	நிதி	— 41
	நன்றி	— 47

தொகுதி - II

பின்னிணைப்பு **A — Z** மற்றும்— **A A**



பேரா. சீனி. கிருட்டிணசுவாமி, பி.எச்டி., (சென்னை), பி.எச்டி., டி.சயி. (சௌத்தாம்ப்டன்)
துணைவேந்தர்

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

20ஆம் ஆண்டு அறிக்கை

இயல் I

பொதுக் கணிப்பு

முன்னுரை :

பல்கலைக் கழகம் :

1965, மதுரை காமராசர் பல்கலைக் கழகச் சட்டம் பிரிவு 21இன் படி 1985 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக ஆண்டு அறிக்கையை ஆட்சிப் பேரவைமுன் வைப்பதில் ஆட்சிக்குழு பெருமகிழ்ச்சியடைகிறது. இவ்வறிக்கையின் தமிழ் வடிவமும் அளிக்கப் பெறுகிறது.

பல்கலைக்கழகத்தில் இணைவிக்கப் பெற்றும் ஒப்புதல் தரப்பெற்றும் உள்ள கல்வி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை கடந்த ஆண்டைப் போலவே 112 ஆகும். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தோடு இணைவிக்கப் பெற்ற கல்லூரிகள் இரண்டு இவ்யாண்டு காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகத்தின் ஆட்சி எல்லைக்குள் வந்துள்ளன. முதுநிலைப் படிப்புகளில் மேலும் இரு கல்லூரிகட்கு இணைவிப்புத்தரப் பெற்று முதுநிலைப்படிப்புக் கல்லூரிகளின் எண்ணிக்கை 55 ஆக உயர்ந்துள்ளது. பல்கலைக்கழகத்தே கற்பித்தலிலும் ஆய்விலும் ஈடுபட்டுள்ள 40 துறைகள் உள்ளன; இணைவிக்கப் பெற்று ஏற்புத் தெரிவிக்கப்பட்ட கல்லூரிகள், பல்கலைக்கழகத் துறைகள், அஞ்சல்வழிக் கல்வி மற்றும் தொடர்கல்வி நிலையம், வெளிப்பல்கலைக்கழகம், மாலைக் கல்லூரி ஆகியவற்றில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1,46,594.

துணைவேந்தர் :

பேரா. ஜா. இராமச்சந்திரன், எம்.ஏ.ஏ.எம். (சிக்காகோ) பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக 1985 ஆகஸ்டு 20வ. வரை தொடர்ந்தார். இப் பல்கலைக்கழகத்தின் உயிரியல் அறிவியல் துறைகளின் தலைவரும் பேராசிரியருமான டாக்டர். சீனி. கிருட்டிணசுவாமி, பிஎச்.டி. டி.சயி., (சௌதாம்ப்டன்) பேரா. ஜா. இராமச்சந்திரனுக்குப் பின் துணைவேந்தராக 1985 அக்டோபர் 4வ. முதல் பொறுப்பேற்றார்,

பேரா. ஜா. இராமச்சந்திரன் ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்னில் 1985 ஆகஸ்டு 13உ முதல் 20உ வரை நடந்த தொடர்கல்வி உலகக் குழுவின் 13ஆவது உலக மாநாட்டில் கலந்து கொண்டார். 1985 சூலை 23உ சென்னையில் நடந்த பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டார்.

துணை வேந்தராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் டாக்டர் சீனி. கிருட்டிணசுவாமி, இந்திய அரசின் புதிய கல்விக் கொள்கையை விரிவாக விவாதிக்கச் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் 1985 அக்டோபர் 11, 12ஆம் நாட்களில் கூட்டிய தென்னகத் துணைவேந்தர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார். 1986 சனவரியில் தில்லியில் நடைபெற்ற இந்தியப்பல்கலைக்கழகங்கள் மன்ற வைர விழாவிலும் அவர் கலந்து கொண்டார்.

பாங்காக்கில் 1985 நவம்பர் 10உ முதல் 15உ வரை நடைபெற்ற சூழ்நிலைக் கல்வி பற்றிய ஐக்கிய நாடுகளின் சூழ்நிலைத் திட்ட வட்டார மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். 1986 பிப்பிரவரியில் பெங்களூரில் நடைபெற்ற கல்வி நிலையங்கட்கிடையே தொடர்புகள் பற்றிய காமன்வெல்த் மாநாட்டிற்குச் செல்லும் பேராளர் குழுவில் ஒருவராக இருந்தார்.

பதிவாளர் :

மேசர் பெ.பா. சின்னதுரை இவ்யாண்டில் பல்கலைக்கழகத்தின் பதிவாளராகத் தொடர்ந்து இருந்து வருகிறார்.

ஆட்சிப் பேரவை :

இவ்யாண்டில் 1985 மார்ச்சு 15, மார்ச்சு 28, அக்டோபர் 18 ஆகிய நாட்களில் ஆட்சிப் பேரவை மும்முறை கூடியது. அமெரிக்காவில் நியூயார்க் புரூக்லினில் உள்ள டௌன்ஸ்டேட் மருத்துவ மைய மருத்துவப் பேராசிரியரும் சிறுநீரகவியல் பிரிவின் தலைவருமாகிய டாக்டர் ஈலி ஏ ஃப்ரைட்மேன் அவர்கட்கு டி.சயி., எனும் மதிப்புப் பட்டத்தினை அளிக்க முடிவு செய்ய 1985 மார்ச்சு 15உ கூடிய சிறப்புக் கூட்டம் முதற் கூட்டம் ஆகும்.

ஆட்சிக்குழு :

இவ்யாண்டில் ஆட்சிக்குழு 19 முறை கூடியது, ஆட்சிக்குழுச் சுற்றுமடல் வழியும் பல வழக்கமான இனங்களை ஆய்ந்து ஒப்புதலளித்தது. 1985 மார்ச்சு 30ஆம் தேதியிலிருந்து மூன்றாண்டுகட்கு ஆட்சிக் குழுவிற்குப் பின்வரும் உறுப்பினர்கள் பல்கலைக்கழக வேந்தரால் நியமிக்கப் பெற்றார்கள்.

டாக்டர் பி. ஆர். சுப்பிரமணியம், எம்.பி., பி,எஸ்.,

திரு ஆர். டி. கோபாலன்.

கல்விப் பேரவை :

கல்விப் பேரவை 7-3-1985லும் பின் 20-9-1985லும் இருமுறை கூடியது.

நிதிக்குழு :

நிதிக்குழு 23-2-1985 அன்று கூடியது.

மாணவர் ஒழுக்கம், நலவாழ்வு மற்றும் விடுதி பற்றிய ஆட்சிக்குழுவின் குழு :

இவ்யாண்டில் இக்குழு, பல்வேறு தேர்வுமையங்களிலிருந்தும் தீய நடவடிக்கைகளிலீடுபட்ட மாணவர்கள் பற்றி விசாரணை செய்யவும் தக்க முடிவு எடுக்கவும் ஏழுமுறை கூடியது. கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் நீக்கம்பற்றியும் ஆராயப் பெற்றது.

பாடத்திட்டக் குழுக்கள் :

1985 சூலை முதல் மூன்றாண்டுகட்கு 48 பாடத்திட்டக் குழுக்கள் புதிய உறுப்பினர்களுடன் மாற்றியமைக்கப்பட்டன. இவ்யாண்டில் 13 பாடத்திட்டக் குழுக்கள் கூடிப் பணிபுரிந்தன; அவற்றின் விவரங்கள் கீழே தரப்பெற்றுள்ளன:

1. பொறியியல்
2. வேதியியல் (முதுநிலை)
3. ஆள்வினை (,,)
4. ஆங்கிலம் (,,)
5. இந்திய மருத்துவம்
6. மனையியல்
7. மருத்துவம் (முதுநிலை)
8. கணிதவியல் (முதுகிலை)
9. மருந்தாக்கவியல் (பட்டநிலை / முதுநிலை)
10. மலையாளம், தெலுங்கு, கன்னடம்
11. தமிழ் (முதுநிலை)
12. இயற்பியல் (முதுநிலை)
13. விலங்கியல் (தேர்வுநிலை)

கற்பித்தல் :

புதுப்படிப்புகள் :

இவ்யாண்டில் பின்வரும் புதியபடிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1. உயிரித்தொழில்நுட்பவியலில் எம் சயி., படிப்பு
2. கணிப்பான் பயன்பாட்டியலில் முதுநிலைப் படிப்பு

புதியகல்லூரிகள் :

இவ்யாண்டில் மேலும் ஒரு சுயநிதிப் பொறியியற் கல்லூரிக்கும் மருந்தாக்கவியல் கல்லூரி ஒன்றுக்கும் கீழே விளக்கப்பட்டுள்ளவாறு இணைவிப்புத் தரப்பெற்றுள்ளது.

1. இரத்தினவேல் சுப்பிரமணியன் பொறியியற் கல்லூரி, திண்டுக்கல்
2. கே.எம். மருந்தாக்கவியல் கல்லூரி, உத்தங்குடி.

எம்.ஃபில்., பட்டப்படிப்பு :

பல்கலைக்கழகப் பல்வேறு துறைகளில் எம்.ஃபில்., படிப்புக்களில் 235 புதிய மாணவர்களும் ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 11 ஆசிரியர்களும் சேர்க்கப்பெற்றனர். மேலும் இணைவிக்கப்பெற்ற கல்லூரிகளில் தமிழ், ஆங்கிலம், வேதியியல், வணிகவியல், விலங்கியல் ஆகியவற்றில் பகுதி நேர எம்.ஃபில்., பட்டப் படிப்புகளில் இணைவிக்கப்பெற்ற கல்லூரிகளிலிருந்து 105 ஆசிரியர்களும் 36 மாணவர்களும் சேர்க்கப்பெற்றனர்.

நூலகம் :

இவ்யாண்டு ரூ. 14.54 இலட்சம் பெறுமான நூல்களையும் இதழ்களையும் பல்கலைக்கழகம் வாங்கியுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவும் நூல்களுக்காக ரூ. 13,14,000/-உம் கருவிகட்காக ரூ. 4,16,000/-உம் வழங்கியது.

கருத்தரங்குகளும் மாநாடுகளும் :

பல்கலைக்கழகத்தின் பலதுறைகள் நடத்திய கருத்தரங்குகள், பணிக்களங்கள் முதலானவற்றில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் உட்பட 832 பேர் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக மானியக்குழு, டிஎஸ்டி., தமிழ்நாடு அரசு, முதலான நிறுவனங்களின் துணையோடும் ஒத்துழைப்போடும் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளால், மாநில, தேசிய, அனைத்துலக அளவிலான 18 பணிக்களங்கள், கருத்தரங்குகள் நடத்தப்பெற்றன.

அத்தகு கருத்தரங்குகள், மாநாடுகள் சிலவற்றின் சுருக்கமான தொகுப்பு கீழே தரப்பெற்றுள்ளது.

1985, அக்டோபர் 19உ பிற்பகல் 2.30 மணிக்கு இராமன் அரங்கத்தில் அறிவியல் ஆசிரியர்கள் நீல்ஸ் போகர் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடினர். இயற்பியல் துறையைச் சேர்ந்த பேரா. கே எஸ். சந்திரசேகரன் தலைமையேற்க வேதியியல் துறைத் தலைவர் பேரா. எஸ்- நீலகண்டன் வந்தி-

குந்தோர்ரை வரவேற்றார். நமது துணைவேந்தர் டாக்டர் சீனி. கிருட்டிணசாமி துவக்கஉரை நிகழ்த்தினார். இதன்பின்னர்ப் பல்கலைக்கழகம், மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் நீல்சு போகரின் ஆளுமையை ஆசிரியர், தத்துவ அறிஞர், இயற்பியலறிஞர், மனிதாபிமானம் மிக்கார் என்ற நிலைகளில் பேசினர்.

1985 நவம்பர் 7உ முதல் 10உ வரை இந்தியத் தேசிய அறிவியல் பேரவையின் 51ஆவது ஆண்டு மாநாடு பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. அதில் சுமார் 160 பேர் பங்கேற்றனர். இந்தியத் தேசியப் பேரவையின் தலைவரும் இந்தியப் பிரதமரின் அறிவியல் ஆலோசனைக் குழுத் தலைவருமான பேரா. சி. என். ஆர். ராவ், சி.எஸ்.ஐ.ஆரின் தலைமை இயக்குநர் டாக்டர் எஸ். வரதராசன், இந்திய அரசு அறிவியல் தொழில்நுட்பவியல் துறைச் செயலர் டாக்டர் யஷ்பால் போன்ற புகழ்பெற்ற அறிவியலறிஞர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

1985 நவம்பர் 18, 19 ஆம் நாட்டில் புதிய கல்விக் கொள்கைபற்றிய இரண்டு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர், டாக்டர் சீனி. கிருட்டிணசுவாமி மாநாட்டின் கருத்துரையை வழங்கினார்.

1985 டிசம்பர் 11உ முதல் 14உ வரை பல்கலைக்கழக உயிரியல் துறையில் உயிர்த் தசைகள், அமைப்பு, உயிர்த் தோற்ற வளர்ச்சி, பரவல் பற்றிய 2ஆவது அனைத்துலகக் கருத்தரங்கம் நடத்தப் பெற்றது. 30 அனைத்துலக அறிவியலறிஞர்களும் 17 இந்திய அறிவியலறிஞர்களும் இதில் கலந்து கொண்டனர்.

1985 1உ முதல் 25உ வரை உயிரியல் துறையில் மேற்குறிப்பிடப்பெற்ற கருத்தரங்கின் கிளைக் கருத்தரங்காக ஆர்கனல், உயிர்த்தசைகள் பற்றிய அனைத்துலகப் பணிக்களமொன்றும் நடத்தப்பெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் சீனி. கிருட்டிணசுவாமி இதனைத் துவக்கிவைத்தார். தாய்லாந்து, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், இரான் உள்ளிட்ட நாடுகளிலிருந்து வந்திருந்தோர் உட்பட 12 பேர் இதில் கலந்து கொண்டனர்.

பரிசுகள், மதிப்புகள், நிதியுதவிகள் :

பயிர் அறிவியல்கள் துறைத் தலைவரும் பேராசிரியருமான டாக்டர் ஏ. ஞானம் திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணை வேந்தராகப் பணியமர்த்தப் பெற்றுள்ளார்.

சுற்றுச் சூழல் அமைப்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் டி. ஜே. பாண்டியன் உயிர் அறிவியல்களில் 1984ஆம் ஆண்டிற்கான பாட்நகர் பரிசிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

புதுதில்லி, பாரதீய ஞானபீடக் குழுவினரால் மொழி ஆலோசனைக் குழுவில் தமிழுக்கான உறுப்பினராக மூன்றாண்டுகட்குத் தமிழியல் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் இராம. பெரியகருப்பன் நியமிக்கப் பெற்றுள்ளார்.

1985-86 ஆண்டிற்குரிய தேசிய விரிவுரையாளராக ஆள்வினைத் துறைத்-தலைவர், பேராசிரியர் டாக்டர் ஜி. பி. ராவ் பல்கலைக் கழக மானியக் குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

1985-86 ஆண்டிற்குரிய தேசிய விரிவுரையாளராக டாக்டர் டி.ஜே. பாண்டியன் பல்கலைக் கழக மானியக் குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இரண்டாண்டுகட்குத் தேசிய அறிஞராக மூலக்கூற்று உயிரியல் துறைத்-தலைவர், பேராசிரியர் டாக்டர் ஆர். செயராமன் பல்கலைக் கழக மானியக் குழுவால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

குகா ஆய்வு மாநாட்டிற்கு ஓர் உறுப்பினராக உயிரியல் அறிவியற்றுறை சார்ந்த செல் உயிரியல் இணைப் பேராசிரியர் டாக்டர் கே. தருமலிங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தகுதி அடிப்படையில் பதவி உயர்வு :

பல்கலைக் கழக ஆசிரியர்கட்கான தகுதி அடிப்படையிலான பதவு உயர்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு ஏழு விரிவுரையாளர்கள் இணைப்பேராசிரியர்-களாகவும் ஐந்து இணைப் பேராசிரியர்கள் பேராசிரியர்களாகவும் பதவி உயர்வு செய்யப்பெற்றுள்ளனர்.

ஆய்வுப் பட்டங்கள் :

இவ்யாண்டில் 32 ஆய்வு மாணவர்களும் 65 ஆசிரியர்களும் பிஎச். டி., பட்டத்திற்குப் பதிவு செய்யப்பட்டனர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்-திலிருந்து ‘உடல் ஒத்திசைவுகள் ஆய்வு’ பற்றிய தனது ஆய்வுக்கட்டுரைக்காக டி. சயி., பட்டத்தினை முதலாமவராகப் பெற்றவர் உயிர் அறிவியல் பள்ளியைச் சேர்ந்த விலங்கு நடத்தையியல் பேராசிரியர் டாக்டர் எம். கே. சந்திரசேகரன் ஆவர். 71 ஆய்வாளர்களால் அளிக்கப்பட்ட ஆய்வேடுகள் டாக்டர் பட்டத்-திற்காகப் பல்கலைக் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பெற்றன.

ஆய்வுத் திட்டங்கள் :

பல்கலைக்கழக மானியக்குழு, டி எஸ் டி., அணுசக்தித்துறை, கல்விஆய்வு, பயிற்சித் தேசியக்குழு, சிஎஸ்ஐஆர், ஐசிஎம்ஆர், ஐசிஏஆர், ஐசிஎஸ்எஸ்ஆர் போன்ற பல நிறுவனங்கள் பல்கலைக் கழகத் துறைகள் பலவற்றால் அளிக்-கப்பட்ட ஆய்வுத்திட்டங்கள் 105 இனுக்கு நிதியுதவியளித்தன.

தமிழ்நாடு அரசு கல்வியமைச்சர் மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில்
1985, நவம்பர் 18ல் இந்திய அரசு, டிஎஸ்டி செயலாளரும், பல்கலைக்கழக
மானியக் குழுவின் தலைவருமான டாக்டர் யஷ்பால் க்ரோனோ உயிரியல்
மற்றும் விலங்கு நடத்தை ஆய்வுக்கூடத்தைத் திறந்து
வைத்தல்.

ஆய்வுக் கட்டுரைகள் :

கடந்த ஆண்டில் 224 ஆக இருக்க இவ்யாண்டில் 265 ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறையினரால் தேசிய, அனைத்துலக ஆய்விதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதியுதவிகள்:

பல்கலைக்கழக மானியக் குழுவினாலும் தேசிய உயிரித்தொழில் நுட்பவியல் குழுவினாலும் உயிரித்தொழில் நுட்பவியலில் எம்.சயி. பட்டப்படிப்பு நடத்துதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்தனுள் பல்கலைக் கழகம் ஒன்றாகும். பல்கலைக்கழக மானியக்குழு இப்படிப்புக்கென ஐந்தாண்டுகட்கு ரூ. 1,15,32,000 வழங்கியுள்ளது.

புதிய கட்டடங்கள் :

இவ்யாண்டில் பின்வரும் கட்டடங்களின் கட்டுமானப் பணி முடிக்கப் பெற்றது.

1. அஞ்சல்வழிக் கல்வி நிலையத்திற்கான அஞ்சல் பகுதிக் கட்டடம்.
2. கலையியல், சமூக அறிவியல் கட்டடம் V

பின்வரும் கட்டடங்கள் முடியுந்தறுவாயிலுள்ளன.

1. தோட்ட நாற்றங்கால் மற்றும் காப்பு அறை
2. தோட்ட நாற்றங்கால் மற்றும் காப்பு அறையின் மேல்முதல்மாடிக் கட்டடம்.

1985, பிப்பிரவரி 18உ திங்கட்கிழமையன்று பல்கலைக்கழக வளாகத்தில் ஆற்றல் அறிவியற் கட்டடம் பல்கலைக்கழக வேந்தரும் தமிழ்நாடு ஆளுநருமான மேதகு திரு எஸ்.எல்.குரானா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தொடக்கத்தில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஜா. இராமச்சந்திரன் அவையோரை வரவேற்று ஆற்றல்துறை பற்றி அறிக்கையொன்றினை வழங்கினார். பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவர் டாக்டர் (திருமதி) மாதுரி ஆர் ஷா விழாவின் தலைமை விருந்தினர் ஆவர். தமிழ்நாடு அரசு, கல்வியமைச்சர் மாண்புமிகு திரு செ அரங்கநாயகம் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். ஆற்றல், சூழல் மற்றும் இயற்கை மூலங்கள் துறைத்தலைவர் பேராசிரியர் டாக்டர் டி. எம். அரிதாசன் நன்றி நவின்றார்.

1985 சூலை 13உ சனிக்கிழமை பல்கலைக்கழக வளாகத்தில் வெளிப்புலக்கலைக் கழகத்தின் ரூ. 7.5 இலக்கம் பெறுமான கட்டடத்தைத் தமிழ்நாடு

அரசு, கல்வியமைச்சர் மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் அவர்கள் திறந்து வைத்தார். இது தொடர்பாகக் கூட்டமொன்று ஆசிரியர் விருந்தில்லத்தில் நடைபெற்றது. துணைவேந்தர் பேரா. ஜா. இராமச்சந்திரன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

''செல் உயிரியல், மரபணுப் பொறியியல் ஆய்வுக் கூடம்'', ''விலங்கு நடத்தையியல் மற்றும் உயிர் வளர்ச்சியியல் ஆய்வுக்கூடம்'' ஆகியவற்றிற்கான கட்டடங்களின் திறப்பு விழாக்கள் தமிழ்நாடு அரசு, கல்வியமைச்சர் மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்றன. இந்திய அரசுச் செயலாளரும், சிஎஸ்ஐஆரின் தலைமை இயக்குநரும் ஆகிய டாக்டர் எஸ். வரதராசன் ''செல் உயிரியல் மற்றும் மரபணுப் பொறியியல் ஆய்வுக் கூடத்தை''யும் இந்திய அரசு, அறிவியல் தொழில் நுட்பவியல் துறைச் செயலர் டாக்டர் யஷ்பால் ''விலங்கு நடத்தையியல் மற்றும் உயிர்வளர்ச்சியியல் ஆய்வுக் கூடத்தை''யும் திறந்து வைத்தனர்.

பேரறிஞர்களின் விரிவாக்கச் சொற்பொழிவுகள் :

பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளில் 57 சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன. சொற்பொழிவுகளாற்றிய பேரறிஞர்கள் சிலரது பெயர்கள் கீழே தரப் பெற்றுள்ளன.

1. டாக்டர் பிஎச். ஆல்பர்ட், பிரான்சு
2. ,, டி.பி. கண்டெல்வால், கான்பூர்
3. ,, டி.எஸ். கெமரான், கானடா
4. பேரா. ரைஸ் அகமது, பமாகு, துணைத்தலைவர்
5. ,, ஜான் ஷார்ட்டர், அமெரிக்கா
6. டாக்டர் இ.டி. இராபர்ட், ,,
7. ,, ஃபிராங்க் வேலிங், எடின்பரோ
8. ,, ரோதர்மண்ட், மேற்குச் செருமனி
9. ,, ஜீன் எம். கிறிஸ்டியன், அமெரிக்கா
10. வணக். நொபொரு கட்சுயாமா, செனீவா
11. டாக்டர் பெர்னாந்து வின்சென்ட், ,,
12. ,, ஜே. ட்ரோவர்ட், பெல்சியம்.
13. பேரா. பட்டாசார்ஜி, அமெரிக்கா
14. டாக்டர் மித்தூர் என். சகதீஷ், அமெரிக்கா
15. ,, எஃப். மைக்கேல், சுவிட்சர்லாந்து
16. பேரா. ஹரதா, சப்பான்
17. ,, கே. டி. மக்கில், (சூனியர்,) அமெரிக்கா

பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகட்கு வருகைபுரிந்த இந்திய மற்றும் பிறநாட்டு அறிஞர்களின் பட்டியல் பின்னிணைப்பு 'D' யில் தரப்பெற்றுள்ளது.

திருநெல்வேலியில் முதுநிலை விரிவாக்க மையம் :

வேதியியல், சமுதாயவியல் துறைகளுடன் கூடிய இம்மையம் தனது ஆய்வுப்பணிகளுடன் முதுநிலைப் படிப்புகளையும் நடத்தித் தன் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறது.

நாகர்கோயிலில் தகவல் மையம் :

1983 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தகவல் மையம் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோரின் தேவைகளுக்கேற்ப வெற்றிகரமாகத் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. இடமகன்ற கட்டடமொன்றில் படிப்பு மையம் ஒன்று விரைவில் தன்பணியைத் தொடங்கவுள்ளது.

தமிழ்ச் செம்மல்கள் :

1983ஆம் ஆண்டிற்கான மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவைச் செம்மல் பட்டங்கள் மாண்புமிகு சிலம்புச்செல்வர் டாக்டர். ம.பொ. சிவஞானம், பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் ஆகிய இரு தமிழ் அறிஞர்கட்கு 1985 சூலை 27 உ நடந்த விழாவில் வழங்கப்பட்டன. தமிழ்நாடு அரசு, கல்வியமைச்சர் மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் இவர்களுக்குப் பாராட்டுரை வழங்கினார்.

ஐந்தமிழ் விழா :

1985 மார்ச்சு 19 உ முதல் 21 உ வரையிலும் மீண்டும் 1985 நவம்பர் 4உ முதல் 6உ வரையிலும் டாக்டர் மு. வ. அரங்கில் ஐந்தமிழ்விழா நடை-பெற்றது. பின்வரும் அறிஞர்களால் பல்வேறு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன:

திரு ந. சுப்பு ரெட்டியார், திரு எம்.ஏ.முருகேசன், திரு சுப. அண்ணாமலை, திரு ஆர். குமாரவேலன், திரு பி. எல். சாமி, திரு எஸ். இன்னாசி, திரு இரா. சாரங்கபாணி, திரு வெ. த. மாணிக்கம், திரு. ச. சாமிமுத்து, திரு வ. சுப. மாணிக்கம், திரு எஸ். சுந்தரம், திரு பி. முருகன், திரு ம, ரா. போ. குருசாமி.

உலகத் தமிழ்ப்பணி :

ஒலிப்பதிவு செய்யப்பட்ட குழந்தைத் தமிழ்ப்பாடல்கள் கொண்ட நாடாத்-தொகுப்பு உலகெங்கும் விற்பனைக்கு உள்ளது. கடைகளில் விற்பனைக்கு இவற்றை வழங்குவதற்காகத் தொடர்புபட்ட குழுமத்துடனான ஒப்பந்தம் ஆய்வில் உள்ளது. இப்பணிமையம் உலகில் உள்ள தமிழ்க் குழந்தைகட்கு இப்பதிவு நாடாக்களுடன் வழங்குவதற்கேற்ற வகையில் குழந்தைகளுக்கான தமிழ்நூல்-களைப் பெறும் சாத்தியக் கூறுகள்பற்றியும் ஆய்ந்து வருகிறது.

பதிப்புத்துறை :

டாக்டர் சி. கே. மகாதேவன் பதிப்பு அலுவலராகத் தொடர்கின்றார். விற்பனைக்கான நூல்களின் எண்ணிக்கை 84 ஆக உயரும் வண்ணம் இவ்யாண்டு 5 புதிய நூல்கள் பதிப்பிக்கப்பட்டன. பதிப்புத் துறை நூற்கண்காட்சிகளில் பங்கேற்றது.

பல்கலைக்கழகச் செய்திமடல் :

வண்ண அச்சுக்களோடும் வகை தொகை செய்யப்பட்ட செய்திகளோடும் புதிய அமைப்போடும் செய்திமடல் வெளியிடப்பட்டது. 'கல்லூரிச் செய்திகள்', 'பல்கலைக்கழகப் பரிசுகள்' போன்றவற்றைச் சேர்த்திருத்தல் செய்திமடலின் சிறப்பம்சங்களுள் ஒன்றாகும். இவ்யாண்டில் மொத்தம் 7 இதழ்கள் வெளியிடப் பட்டன.

உயிரியல் ஆய்விதழ் :

பல்கலைக் கழக மானியக்குழுவால் உந்தப்பெற்று உயிரியலைக் கற்பித்தல், கற்றல் தொடர்பான முழுநீளக் கட்டுரைகள், சிறுதகவல்கள், மதிப்பீடுகள் கொண்ட உயர்கல்விக் காலாண்டிதழின் நான்கு இதழ்கள் வெளியிடப் பெற்றுள்ளன. மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் சீனி. கிருட்டிணசுவாமி இதன் தலைமை ஆசிரியராகத் தொடர்ந்து இருந்து வருகிறார்.

பல்கலைக்கழக அறிவியற் கருவி மையம் :

மையத்தின் பொறுப்புப் பேராசிரியராகப் பேராசிரியர் என். ஆறுமுகம் தொடர்ந்து இருந்து வருகிறார். கருவியாக்கத்தில் ஆய்வு, வளர்ச்சிப்பணி ஆகியவற்றோடும் கூடக் கருவிகளைப் பழுதுபார்த்தல் முதலான தொண்டுகளில் பொறுப்பேற்றுள்ளது இம்மையம். பல்கலைக் கழகத் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு அன்றாடம் தங்கள் ஆய்வுக் கூடக் கருவிகளைச் செம்மையாக வைத்திருக்கத்தக்க வகையில் நேர்முகப் பயிற்சித் திட்டம் ஒன்றினை நடத்த இம்மையம் நினைத்துள்ளது.

கணிப்பான் மையம் :

இம்மையம் பல்கலைக்கழக, கல்லூரி ஆசிரியர்கட்கும் ஆய்வு மாணவர்கட்கும் அவர்தம் கணிப்பான் தேவைகளை நிறைவு செய்வதன்வழித்தன்பணியைத் தொடர்ந்துள்ளது. இவ்யாண்டிலிருந்து தனது தொண்டுகளை அலுவலக, தேர்வுப் பிரிவுகட்கும் விரிவுபடுத்தியுள்ளது. ஆசிரியர்கள், ஆய்வு மாணவர்கட்கு ஒன்றும் அலுவலகப் பணியாளர்கட்கொன்றுமாக ''பேசிக்கில் திட்டமிடுதல்'' என்பதில் இரு வகுப்புக்கள் நடத்தப்பெற்றன,

பல்கலைக் கழக மானியக் குழுவால் பணியமர்த்தப்பெற்ற ஆய்வுக்குழு-வொன்று 1985 நவம்பரில் இம்மையத்தினைப் பார்வையிட்டு நிதியுதவி, பெரிய கணிப்பானொன்று ஆகியவற்றுடன் இதனை வலுப்படுத்தப் பரிந்துரை செய்தது.

அறிவியற் கல்வி மையம் :

டாக்டர் சி. இ. சூரியமூர்த்தி இம்மையத்தின் கௌரவ இயக்குநராகத் தொடர்ந்து வருகிறார். விண்கோள் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய சூரிய ஆய்வுக்கூடத்தை மதுரை மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள பள்ளிகளின் மாணவர்கள் அடிக்கடி வந்து பார்வையிட்டனர். மாணவர்களது நலனைக் கருதி ''மோர்சு குறியீட்டிலும் மின்னியல் அறிமுகத்தி''லும் வகுப்புக்கள் தொடங்கப்பட்டன.

படிப்பு மையம் :

மதுரையிலொன்றும் பாளையங்கோட்டையிலொன்றுமாக இரு படிப்பு மையங்கள் வழக்கம்போல இயங்கி கல்லூரி மற்றும் அஞ்சல்வழிக் கல்வி நிலைய மாணவர்கட்குப பாடநூல்களையும் மேற்பார்வை நூல்களையும் வழங்குவதன்வழி அவர்கட்குத் தொண்டு புரிகிறது.

விளையாட்டுகளும் போட்டிகளும் :

8-4-1985 முதல் திரு ஏ. ஆர். தனராசு உடற்கல்வி மற்றும் பொழுது போக்கு இயக்குநராகப் பொறுப்பேற்றார். 1985 சனவரியில் நடைபெற்ற பல்கலைக்கழகங்கட்கிடையேயான போட்டிகளில் பூப்பந்து (ஆண் & பெண்), ஆக்கி, டென்னிஸ், எடை தூக்குதல் ஆகியவற்றிலான பல்கலைக்கழகக் குழுக்கள் கலந்து கொண்டன. 1985 பிப்பிரவரி 7உ அன்று மதுரையில் 1984-85ஆம் ஆண்டிற்குரிய கல்லூரிகட்கிடையேயான மகளிர் போட்டிகள் நடத்தப்பெற்றன. 1985 பிப்ரவரி-மார்ச்சில் 1984-85ஆம் ஆண்டிற்குரிய கல்லூரிகட்கிடையேயான ஆடவர் மண்டலப் போட்டிகள் நடத்தப்பெற்றன.

தேசிய மாணவர் படை :

இணைவிக்கப் பெற்ற 67 கல்லூரிகளிலுமான தற்போதைய மாணவர் படைத் தொகை 3858 ஆண்களும் 897 பெண்களும் ஆகும். பல்கலைக்கழகத்-தோடிணைவிக்கப் பெற்ற கல்லூரிகளில் தேசிய மாணவர் படையின் இவ்யாண்டு நடவடிக்கைகளின் விரிவான அறிக்கை பின்னிணைப்பு 'S'இல் தரப்பெற்றுள்ளது.

நாட்டுத் தொண்டுத் திட்டம் :

நாட்டுத் தொண்டுத் திட்டத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளராகத் திரு. எஸ். இராசு தொடர்ந்து இருந்து வருகிறார். நாட்டுத் தொண்டுத் திட்டத்தில் மாணவர்களின் தொகை இவ்யாண்டு 16000 ஆகும், இஃது கல்லூரிகளிலுள்ள

மாணவர்களின் மொத்தத் தொகையில் 23% ஆகும். இத்துறை, பல்கலைக்கழகங்கட்கிடையேயான ஒருமைப்பாட்டுக் கூட்டத்தையும் நாட்டுத் தொண்டுத் திட்ட அலுவலர்க்கான வட்டாரப் பணிக்களத்தையும் நடத்தியது. இவை தவிர இத்துறை நாட்டுத்தொண்டுத் திட்ட மாணவர்கட்கும் திட்ட அலுவலர்க்குமெனப் பல விழாக்களையும் மாநாடுகளையும் நடத்தியது.

இளைஞர் நலத்துறை :

துறையின் இயக்குநராகத் திரு வை. தட்சிணாமூர்த்தி தொடர்ந்து இருந்து வருகிறார். இவ்யாண்டு அனைத்துலக இளைஞர் ஆண்டாதலின் இத்துறை 1985 சனவரியில் இளைஞர் விழாவிற்கு ஏற்பாடு செய்து நடத்தியது.

பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டுதல் மையம் :

இம்மையத்தில் பதிவு செய்துள்ளோரின் மொத்த எண்ணிக்கை 399; இவர்களுள் 169 பேர் பெண்கள். முதுநிலை மற்றும் பணிநோக்குப் பட்டம் பெற்றோர்க்கு வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் நெறிப்படுத்தற் பணி செய்யப்பட்டது.

தேசிய வயது வந்தோர் கல்வித்திட்டம் :

திட்டத்தின் இயக்குநராகத் திரு ஆர். அரங்கசாமி தொடர்ந்து இருந்து வருகிறார். இத்திட்டத்தில் பல்கலைக்கழக எல்லைக்குட் பட்ட 66 கல்லூரிகள் ஈடுபட்டுள்ளன. பல்கலைக் கழக மானியக் குழுவின் துணையோடு ''கல்லூரிகளும் கல்வி தொடர்தலும்'' என்பது பற்றிய வட்டாரப் பணிக்களம் ஒன்று 1985 சூலை 13உ முதல் 16உ வரை நடத்தப் பெற்றது; இதில் 45 பேர் பங்கேற்றனர். வயது வந்தோர் கல்வி மேற்பார்வையாளர்கட்கான மூன்று நாள் பணிக்களமொன்று 1985 பிப்பிரவரி 26உ முதல் 28உ வரை நடத்தப்பெற்றது.

அஞ்சல் வழிக் கல்வி மற்றும் தொடர் கல்வி நிலையம் :

நிலையத்தின் இயக்குநராக டாக்டர் டி.பி. சித்தலிங்கையா தொடர்ந்து இருந்து வருகிறார். கடந்த ஆண்டு 53,737 மாணவர்களேயிருக்க மொத்தம் 64,579 மாணவர்களோடு தனது 15ஆவது ஆண்டுப் பணியில் அடியெடுத்து வைத்துள்ளது. 1985 ஆகஸ்டு 13உ முதல் 20உவரை ஆஸ்திரேலியா மெல்போர்ன் நகரில் நடைபெற்ற தொலைக் கல்வி பற்றிய 13உ ஆம் அனைத்துலக மாநாட்டில் பங்கேற்றார்.

வெளிப்பல்கலைக் கழகம் :

12,514 மாணவர்களுடன் வெளிப் பல்கலைக்கழகம் தனது 9ஆவது ஆண்டுப் பணியில் அடியெடுத்து வைத்துள்ளது. வெளிப்பல்கலைக்கழகத்தின்



1986, பிப்பிரவரி 10உ நடந்த 19ஆவது ஆண்டுப் பட்டமளிப்பு விழாவின்போது புதுதில்லி, திட்டக்குழு உறுப்பினரும், பிரதம மந்திரியின் அறிவியல் ஆலோசகருமான பேராசிரியர் எம். ஜி. கே. மேனன் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்துதல்.

தொடக்க நிலை, அடிப்படை நிலைப் படிப்புக்களை வேலை வாய்ப்பு மற்றும் கல்வி நோக்கங்கட்குத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் தந்துள்ளது.

மாலைக்கல்லூரி :

2-5-1985 முதல் கல்லூரியின் இயக்குநராக ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியர் டாக்டர் பி. மருதநாயகம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இவ்யாண்டில் முதுநிலை, இளநிலை, பகுதிநேரப் படிப்புக்களில் மாணவர் தொகை 823 ஆகும். ஐ.ஏ.எஸ். முதனிலைத் தேர்விற்கென 115 மாணவர்கட்கு நெறிகாட்டும் வகுப்புக்களைக் கல்லூரி நடத்தியது.

பட்டமளிப்பு விழா :

1985 மார்ச்சு 18உ பிற்பகல் 3-00 மணிக்குச் சிறப்புப்பட்டமளிப்புவிழா ஒன்று அமெரிக்க நாட்டு நியூயார்க் ப்ருக்லினில் உள்ள டௌன்ஸ்டேட் மருத்துவ மையச் சிறு நீரகப் பிரிவின் தலைவரும் மருந்தியல் பேராசிரியருமான டாக்டர் ஈலி ஃப்ரைட் மேன் அவர்கட்கு அறிவியல் மூதறிஞர் (மதிப்புநிலை) பட்டம் வழங்குதற்கென நடத்தப்பெற்றது. பல்கலைக் கழக இணைவேந்தரும் கல்வியமைச்சருமான மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் பட்டமளிப்புவிழாவிற்குத் தலைமை தாங்கினார்.

1986 பிப்பிரவரி 10உ பல்கலைக்கழக பத்தொன்பதாவது ஆண்டுப் பட்டமளிப்புவிழா நிகழ்ந்தது. பல்கலைக்கழக வேந்தரும் தமிழக ஆளுநருமான மேதகு திரு. எஸ். எல். குரானா விழாவிற்குத் தலைமை தாங்கினார். திட்டக்குழு உறுப்பினர் பேராசிரியர் எம். ஜி. கே. மேனன் பட்டமளிப்புவிழாப் பேருரை நிகழ்த்தினார். 161 பேர் நேரில் தங்கள் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இயல் II

பல்கலைக்கழகத் துறைகளும் இணைவிக்கப்பெற்ற கல்லூரிகளும்

பல்கலைக் கழகத் துறைகள் :

இவ்யாண்டில் பல்கலைக்கழகத் துறைகள் தங்கள் கற்பித்தல், ஆய்வு நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டன. பல்கலைக் கழகத்தின் 40 துறைகளில் 1030 முதுநிலை மற்றும் எம்.ஃபில்., மாணவர்களும் 194 முழுநேர ஆய்வாளர்களும் இருந்தனர். 42 பேராசிரியர்களும் 70இணைப் பேராசிரியர்களும் 203 விரிவுரையாளர்களும் இருந்தனர். இவ்யாண்டில் பணியமர்த்தப்பெற்ற 32 புதிய ஆசிரியர்களும் இத்தொகையுள் அடங்குவர்.

இவ்வாண்டில் வெளிநாடுகள் சென்ற பல்கலைக்கழக ஆசிரியர்களது பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை I

வ. எண். (1)	ஆசிரியர் பெயர் (2)	துறையின் பெயர் (3)	சென்றநாடு (4)	சென்றதன் நோக்கமும் காலமும் (5)
1.	டாக்டர் டி.எம். அரிதாசன்	ஆற்றல்	இத்தாலி	1985சூன் முதல் செப்டம்பர் வரை 3 மாதங்கள் டிரியஸ்டே, அனைத்துலக இயற்பியல் கோட்பாட்டு மைய நடவடிக்கைகளில் உறுப்பினராகக் கலந்து கொள்ள.
2.	டாக்டர் சி.பி. எஸ்.ஆர். சர்மா	,,	தாய்லாந்து	1985 பிப்பிரவரி 19 முதல் 22 வரை சிங்மாய், அனைத்துலகப் பூச்சி கொல்லி மருந்து மாநாட்டில் கலந்து கொள்ள.
3.	டாக்டர் எஸ். பாலசுப்பிரமணியன்	இயற்பியல்	இத்தாலி	1985சூன் முதல் செப்டம்பர் வரை. இத்தாலி, டிரியஸ்டேயில் 'சுருக்கிய பொருள்' ஆய்வுப் பணிக்களத்தில் பங்கு கொள்ள.
4.	டாக்டர் டி. வசந்த குமாரி	மொழியியல்	பிரான்சு	அனைத்துலக அரசியலறிவியல் மன்ற 13ஆவது உலக மாநாட்டில் கலந்து கொள்ள.
5.	டாக்டர் எஸ். கிருட்டிணசுவாமி	உயிரியல்	அமெரிக்கா	1985 சூலை 15உ முதல் 20உ வரை. வாசிங்டன் டி. சி. யில் ''ஸ்கோப்'' பொதுக்குழுக்கூட்டத்தில் கலந்துகொள்ள.

6.	,,	,,	தாய்லாந்து	1985 நவம்பர் பாங்காக்கில் பொதுச் சுற்றுச் சூழல் கல்வியின் யுஎன்இபி கூட்-டத்தில் கலந்து கொள்ள.
7.	டாக்டர் எஸ் சுப்பிரமணியன்	அரசியல் அறிவியல்	பிரான்சு	பாரிசு, அனைத்துலக அரசியலறிவியல் மன்ற 13ஆவது உலக மாநாட்டில் கலந்து கொள்ள.
8.	திரு ஆல்பர்ட் ஜான்சன்	,,	,,	1985 சூலை 15-20 ,,
9.	பேரா. டி. ஜே. பாண்டியன்	விலங்கு அறிவியல்	நார்வே	1985 செப்டம்பர் அக்டோபர். அழைப்பு அறிவியலறிஞராக
10.	,,	,,	மலேசியா	1985 டிசம்பர் IIஆம் ஆசிய மாநாட்டில் கலந்து கொள்ள.
11.	டாக்டர் எஸ் மாதவன்	,,	,,	,,
12.	பேரா. எம். கே. சந்திரசேகரன்	விலங்கு நடத்தையியல்	அமெரிக்கா	அமெரிக்கா, நியூஹாம்ப்-ஷையர் பிளிமத்தில் நடந்த கோர்டன் மாநாட்டில் கலந்து கொள்ள.
13.	டாக்டர் ஆர். சுப்பராஜ்	,,	செர்மானியக் கூட்டுக் குடியரசு	18 மாதங்கள் ஆய்வுப்பணி
14.	டாக்டர் நா. செயராமன்	தமிழியல்	இலங்கை	அனைத்துலகச் சைவ சமய மாநாடு

15. டாக்டர் எஸ். இரர்சகோபால்	வேதியியல்	சப்பான்	1985 அக்டோபரிலிருந்து- யுனெஸ்கோ ஆய்வு நிதியுதவி.
16. டாக்டர் எம். பழநியாண்டவர்	,,	அமெரிக்கா	பிலடெல்பியா ட்ரெக்ஸல் பல்கலைக் கழகத்தில் அறிஞர் பட்டத்திற்குப் பின்னான ஆய்விற்காக.

எம் ஃபில், திட்டம் :

பல்கலைக் கழகத் துறைகளில் பல்வேறு பாடங்களில் எம்.ஃபில்., பட்டப் படிப்புகட்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். சேர்க்கப்பட்ட மாணவர்களது எண்ணிக்கை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

அட்டவணை II

வ.எண்	பாடங்கள்	ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
1	தமிழ்	12	24	36
2	ஆங்கிலம்	7	19	26
3	வரலாறு	17	13	30
4	பொருளாதாரம்	16	10	26
5	திணையியல்	2	6	8
6	சமூகவியல்	9	3	12
7	அரசியலறிவியல்	10	3	13
8	சமஸ்கிருதம்	1	—	1
9	கல்வி	5	4	9
10	பிரெஞ்சு	1	3	4
11	கணிதம்	21	4	25
12	இயற்பியல்	5	7	12
13	வேதியியல்	6	4	10
14	ஆற்றல்-சுற்றுச்சூழல்	4	4	8
15	வணிகம்	10	5	15

எம்.சயி , உயிரித்தொழில்நுட்பவியல் படிப்பு :

தேசிய உயிரித்தொழில்நுட்பவியற்குழுவாலும் பல்கலைக் கழக மாணியக் குழுவாலும் உயிரித்தொழில்நுட்பவியலில் எம்.சயி., கற்பிக்கும் திட்டத்திற்காக இப்பல்கலைக்கழகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ. 115.32 லட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது. அவ்வண்ணமே இவ்வாண்டு பத்து மாணவர்கள் சேர்க்கப் பெற்று இப்புதிய படிப்பு உயிரியல் அறிவியற் பள்ளியில் தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் மாணவர்கட்கு ரூ400/ நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

அஞ்சல்வழிக் கல்வி மற்றும் தொடர்கல்வி நிலையம் :

அஞ்சல்வழிக் கல்வி மற்றும் தொடர்கல்வி நிலையம் தனது 15 ஆவது ஆண்டுப் பணியில் அடியெடுத்து வைத்துள்ளது. நிலையத்தில் கடந்த ஆண்டின் எண்ணிக்கை 55,737ஐ விட இவ்யாண்டின் சேர்க்கை எண்ணிக்கை (வெளிப் பல்கலைக்கழகம் நீங்கலாக) 64,579 ஆகும்.

இந்நிலையம் தற்போது 9 இளங்கலைப்பட்டப் படிப்புகளையும் (வரலாறு, அரசியலறிவியல், சமூக அறிவியல், பொருளாதாரம், திணையியல், தமிழ், ஆங்கிலம்,கணிதம், வாணிகம்) 7 முதுநிலைப்பட்டப் படிப்புகள் (வரலாறு, அரசியல் அறிவியல், பொருளாதாரம், தமிழ், ஆங்கிலம், காந்தியச் சிந்தனை, எம். காம்.,) பி. ஜி. எல்., பி. இடி., எம். இடி. பட்டப்படிப்புகள் வழங்குகிறது. வெளிப் பல்கலைக்கழக அமைப்பின் கீழ் அடிப்படைப்படிப்புகளும் நடத்தப் பெறுகின்றன.

ஓர் இயக்குநர், துணை இயக்குநர்கள் மூவர் (கல்வி, வெளிப்பல்கலைக்-கழகம், அஞ்சல்வழிக்கல்வி மற்றும் தொடர்கல்வி நிலையம் ஆகியவற்றிற்குத் தலா ஒருவர் வீதம்) 112 ஆசிரியர்கள் தற்போது உள்ளனர். தற்போது அலுவலகப் பணியாளர்கள், இரு இணைப்பதிவாளர்கள், நான்கு துணைப்-பதிவாளர்களோடு 315 பேர் உள்ளனர்.

பல்வேறு படிப்புகட்கு ஐந்து வேறு மையங்களில் தொடர்புக் கருத்-தரங்குகள் ஒழுங்கு செய்யப்பெற்றன விடுமுறையின்போது பி.இடி., எம்.இடி., மாணவர்கட்குக் கோடை ஒலிப்பரப்போடும் கூட அஞ்சல்வழிக் கல்வி மற்றும் தொடர்கல்வி நிலையத்தால் நடத்தப்பெற்ற ஒலிபரப்புத் திட்டம் அனைத்துப் படிப்புகட்கும் அமைந்திருந்தது.

அஞ்சல்வழிக் கல்வி மற்றும் தொடர்கல்வி நிலைய மாணவர் நலன் கருதி சென்னை, திருநெல்வேலி, மதுரை, நாகர்கோயில் ஆகிய ஊர்களில் தகவல் மையங்கள் செயலாற்றின.

அஞ்சல்வழிக் கல்வி மற்றும் தொடர்கல்வி நிலையத்தில் பல்வேறு படிப்புக்-களில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் கீழே தரப்-பெற்றுள்ளன.

அட்டவணை III

படிப்பின் பெயர்	31--12-84 இல் மாணவர்கள்			31-12-1985 இல் மாணவர்கள்		
	ஆடவர்	மகளிர்	மொத்தம்	ஆடவர்	மகளிர்	மொத்தம்
இளநிலைப் பட்டப்படிப்பு	21,595	11,407	33,002	26,024	14,313	40,337
முதுநிலைப் பட்டப்படிப்பு	13,300	5,290	18,590	11,958	6,898	18,856
பணிநோக்குப் பட்டப்படிப்பு	3,066	1,079	4,145	3,922	1,464	5,386

ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆசிரியர் நால்வர் பி. எச்டி., பட்டத்திற்கு ஆய்வுப்பணிபுரிய அனுப்பப்பட்டுள்ளனர்; ஆசிரியர் மூவர்க்குத் தங்கள் பிஎச். டி., திட்டப் பணியை முடிப்பதாகக் கல்வி விடுப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாலைக் கல்லூரி :

மாலைக் கல்லூரி நகர் வளாகத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. கல்லூரி தற்போது பகுதி நேரச் சான்றிதழ், மேற்சான்றிதழ் வகுப்புக்களோடும் கூட இளநிலை, முதுநிலைப் பட்டப்படிப்புகளையும் நடத்தி வருகிறது இயக்குநர் ஒருவரும், 140 பகுதிநேர ஆசிரியர்களும் தற்போது உள்ளனர். கல்லூரியின் மாணவர் எணணிக்கை 823 ஆகும்.

இணைவிக்கப்பெற்ற கல்லூரிகள் :

இவ்யாண்டில் மேலும் முதுநிலைப் பட்டப்படிப்புகள் நடத்த 14 கல்லூரிகட்கும் இளநிலைப் பட்டப்படிப்புகள் நடத்த 15 கல்லூரிகட்கும் இணைவிப்பு வழங்கப்பெற்றது. சான்றிதழ், மேற்சான்றிதழ்ப் படிப்புகள் வழங்க 9 கல்லூரிகட்கு அனுமதி வழங்கியதோடு மாலைக் கல்லூரியில் பி. காம்., பட்டப்படிப்பு நடத்த இரு கல்லூரிகட்கும் அனுமதி வழங்கப்பட்டது. கல்லூரிகட்கு அனுமதி வழங்கப்பட்ட படிப்புகள் பற்றிய விவரங்கள் பின்னிணைப்பு ‘F’ இல் தரப்பட்டுள்ளன.

பல்வேறு இனங்களின் கீழ்ப் பல்கலைக் கழகத்தோடு இணைவிக்கப்பெற்ற கல்லூரிகளின் எண்ணிக்கையை அட்டவணை IV காட்டுகிறது.


MADURAI
Scale 1:63360
R. Vaigai
PALKALAINAGAR
MADURAI UNIVERSITY
Scale 1:126720
PALANI
AMBILIKAI
DINDIGUL
GANDHIGRAM
PERIAKULAM
BODINAYAKKANUR
USILAMPATTI
SHOLAVANDAN
MELUR
MADURAI
KARUMATHUR
UTHAMAPALAYAM
KALLUPATTI
VIRUDHUNAGAR
PULANKURICHI
PALLATHUR
THIRUPATHUR
KARAIKUDI
DEVAKOTTAI
SIVAGANGA
ILAYANGUDI
RAJAPALAYAM
SIVAKASI
ARUPPUKOTTAI
SATTUR
KAMUDHI
RAMANATHAPURAM
RAMESWARAM
KOVILPATTI
COURTALLAM
ALWARKURICHI
PAPANASAM
AMBASAMUDRAM
TIRUNELVELI
PALAYAMKOTTAI
TUTICORIN
SAWYERPURAM
SRIVAIKUNDAM
TIRUCHENDUR
KALUGUMALAI
ATHUR
MARTHANDAM
ALOOR
ARAMBOLY
KAZHITHURAI
NEYYOOR
NAGERCOIL
THODAVOOR
AGASTHEESWARAM
Scale 1:1013760
KARAIKUDI
Scale 1:63360
ARTS & SCIENCE COLLEGES
PROFESSIONAL & OTHER INSTITUTIONS
TIRUNELVELI
PALAYAMKOTTAI
R. Tambrabarani
Scale 1:63360
TUTICORIN
BAY OF BENGAL
NAGERCOIL

அட்டவணை IV

வெவ்வேறு ஆண்டுகளில் கல்லூரிகளின் எண்ணிக்கை

	1983	1984	1985
I. பொதுக் கல்விக்கான கல்லூரிகள்			
ஆடவர் : அரசு	3	3	4
நிதியுதவி பெறுபவை	58+1*	58+1*	59+1*
மகளிர் : அரசு	3	3	3
நிதியுதவி பெறுபவை	17	17	17
II பணிநோக்குக் கல்விக் கல்லூரிகள்			
அ) சட்டம் : அரசு	1	1	1
ஆ) மருத்துவம் : அரசு	2	2	2
இ) இந்திய மருத்துவம் : அரசு	1	1	1
ஈ) மருந்தியல் : சுயநிதி	—	—	1
உ) பொறியியல் : அரசு	2	2	2
நிதியுதவி பெறுபவை	1	1	1
சுயநிதி	—	6	7
ஊ) கல்வி : ஆடவர் நிதியுதவி பெறுபவை	6	6	5
மகளிர் நிதியுதவி பெறுபவை	3	3	3
எ) உடற்கல்வி : நிதியுதவி பெறுவது	1	1	1
III பிற நிலையங்கள்	5**	5**	5**
	103+1*	111+1*	111+1*

* எம்.ஜி.என். கல்லூரி, சங்கரன் கோவில், மறு பரிசீலனைகோரி அதன் பேரில் உயர் நீதிமன்றத் தீர்ப்பையும் மறுபரிசீலனை வழக்கு எண். 327/1974 இன் மீதான உயர் நீதிமன்ற ஆணையை எதிர்த்துப் பல்கலைக்கழகத்தின் சார்பில் போட்டிருக்கும் தடை விண்ணப்பத்தின் மீதான தீர்ப்பையும் பொறுத்து.

**டி. ஓ. படிப்பு வழங்கும் மதுரை, அரவிந்த் கண் மருத்துவ மனையையும் இது உள்ளடக்கியது.

1985ஆம் ஆண்டிலிருந்து காரைக்குடி, டாக்டர் அழகப்பச் செட்டியார் பயிற்சிக் கல்லூரியும் காரைக்குடி அழகப்பா உடற்கல்விக் கல்லூரியும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டுள்ளன.

கல்லூரி வளர்ச்சிக் குழு

கல்லூரி வளர்ச்சிக் குழுவின் பதவிக் காலம் 1985 செப்டம்பரோடு முடிவடைந்தது; குழு மறுவமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மொத்தத்தில் பல்வேறு திட்டங்களின் கீழ் 68 கல்லூரிகள் பல்கலைக் கழக மானியக்குழு அளித்த நிதியுதவிகளைப் பயன்படுத்திக் கொண்டன. நிதியுதவி களைத் தக்கபடி பயன்படுத்துதலை உறுதிசெய்ய அமைக்கப்பட்ட கல்லூரி வளர்ச்சிக் குழுவின் உட்குழுக்கள் 58 கல்லூரிகளைப் பார்வையிட்டுப் பல்கலைக் கழக மானியக் குழு அளித்த நிதிகள் பற்றிய கணக்குகளை ஆய்வு செய்தன. கணக்குகளை வைத்திருத்தல் பற்றிய ஆய்வுக் குழுக்களின் அறிக்கைகள் பல்கலைக் கழகமானியக் குழுவிற்கும் தமிழ்நாடு அரசிற்கும் அனுப்பி வைக்கப் பெற்றன.

பல்வேறு திட்டங்களின் கீழ்க் கல்லூரிகட்குப் பல்கலைக் கழகமானியக்குழு வழங்கிய நிதியுதவிகள் பற்றிய விவரங்கள் பின்னிணைப்பு ‘Q’ வில் தரப பெற்றுள்ளன.

அட்டவணை V

மாணவர்கள் தொகை:

கல்லூரிகளில் பல்வேறு படிப்புகளில் (மாலைக் கல்லூரி உட்பட) உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை பற்றிய விவரங்கள் கீழே தரப்பெற்றுள்ளன.

	31-12-84 இல் மாணவர்கள்			31-12-85 இல் மாணவர்கள்		
	ஆடவர்	மகளிர்	மொத்தம்	ஆடவர்	மகளிர்	மொத்தம்
இளநிலைப் பட்டப்படிப்பு	32,751	21,103	53,854	31,305	19,562	50,867
முதுநிலைப் பட்டப்படிப்பு	2,954	2,091	5,045	3,417	2,305	5,722
(பணிநோக்குப் பட்டப்படிப்பு தவிர)						
பணிநோக்கு இளநிலைப் பட்டப்படிப்பு	6,082	2,424	8,506	8,552	2,171	10,723
முதுநிலைப் பணிநோக்குப் பட்டப்படிப்பு	291	70	361	210	46	256
பிற :						
(புலவர்-சான்றிதழ் மேற்சான்றிதழ்ப் படிப்புகள்	897	305	1,202	882	314	1,196
எம். ஃபில்.,	45	49	94	46	21	67
பிஎச். டி.,	14	13	27	—	—	—

தேர்வு முடிவுகள்:

1985-ஆம் ஆண்டில் பல்வேறு தேர்வுகளில் அமர்ந்து தேர்வு பெற்ற மாணவர்களது எண்ணிக்கையைக் காட்டும் அட்டவணை கீழே தரப்பெற்றுள்ளது.

அட்டவணை VI

பாடங்கள்	தேர்விற்கு அமர்ந்த மாணவர் எண்ணிக்கை	தேர்வு பெற்ற மாணவர் எண்ணிக்கை	தேர்வு விழுக்காடு	முதல் வகுப்பில் தேறிய மாணவர் எண்ணிக்கை
1	2	3	4	5
ஓ. டி. முதனிலை	432	105	24.31	இல்லை.
ஓ. டி. இறுதிநிலை	419	134	31.98	1
பி. ஏ. (பருவ முறை)				
தமிழ்	148	119	80.41	88
ஆங்கிலம்	825	544	65.94	70
பொருளாதாரம்	1329	850	63.96	390
வரலாறு	1362	827	60.72	337
சமூகவியல்	62	53	85.48	19
அரசியலறிவியல்	26	6	23.08	இல்லை.
தத்துவம்	19	17	89.47	14
இந்தியப் பண்பாடு	6	6	100.00	இல்லை.
பி. ஏ. (சிறப்பு)	37	8	21.62	இல்லை.
பி. மியூசிக்	14	9	64.28	3
பி. லிட்,	23	16	69.56	3
பி.ஏ. (அல் பருவமுறை)				
தமிழ்	37	1	2.70	இல்லை.
ஆங்கிலம்	39	4	10.26	,,
பொருளாதாரம்	367	12	3.27	,,
வரலாறு	894	60	6.27	,,
சமூக அறிவியல்கள்	16	1	6.25	,,
அரசியலறிவியல்	38	6	15.79	,,
பி.சயி. (பருவமுறை)				
கணிதம்	1702	700	41.13	567
இயற்பியல்	986	634	64.30	607

1	2	3	4	5
வேதியியல்	1758	881	50.11	839
பயிரியல்	708	381	53.81	290
பயன்பாட்டு விலங்கியல்	45	24	53.33	18
நிலவியல்	57	22	38.60	7
விலங்கியல்	1318	715	54.25	571
பி.எஸ்சி (அல்பருவமுறை)				
கணிதம்	334	19	5.69	1
இயற்பியல்	257	2	0.78	1
வேதியியல்	409	6	1.47	இல்லை
பயிரியல்	313	3	0.96	,,
விலங்கியல்	355	8	2.25	,,
பி.காம். (பருவமுறை)	2189	1417	64.73	787
பி.காம். (அல்பருவமுறை)	6726	581	8.64	8
பி.பி.ஏ. (பருவமுறை)	384	212	55.20	49
எம்.ஏ. (பருவமுறை)				
தமிழ்	209	158	75.60	136
ஆங்கிலம்	341	168	49.27	55
பொருளாதாரம்	302	197	65.23	170
வரலாறு	273	172	63.00	140
சமூகவியல்	29	25	86.21	12
சமூகப்பணி	40	33	82.89	28
அரசியலறிவியல்	11	7	58.33	6
மொழியியல்	8	7	87.50	5
தத்துவமும் சமயமும்	10	8	80.00	5
பிரெஞ்சு	5	4	80.00	4
மலையாளம்	5	4	80.00	3
எம்.ஏ. (அல்பருவமுறை)				
தமிழ்	1650	319	19.33	12
ஆங்கிலம்	2293	1107	48.28	இல்லை
பொருளாதாரம்	1940	268	13.81	,,
வரலாறு	2938	370	12.50	,,
அரசியலறிவியல்	1781	319	17.91	,,
எம்.காம். (பருவமுறை)	600	250	41.67	,,
எம்.காம். (அல்பருவமுறை)	1450	275	18.97	,,

1	2	3	4	5
எம். சயி (பருவ முறை)				
கணிதம்	302	207	68.54	206
கணிதப் பொருளாதாரம்	15	12	80.00	11
இயற்பியல்	117	48	41.03	47
வேதியியல்	91	59	64.84	59
எம். சயி (பருவ முறை)				
பயிரியல்	132	84	63.64	77
விலங்கியல்	108	86	79.63	86
நிலவியல்	17	15	88.24	15
திணையியல்	29	15	51.73	12
அமைதி ஆக்கம்	12	8	66.67	5
ஊரக மேம்பாட்டு அறிவியல்	18	13	72.22	13
கணிதம் (அல்பருவ முறை)	91	31	14.29	2
எம். மியூசிக்	1	1	100.00	1
எம். பி. ஏ. (பருவ முறை)	30	22	73.33	21
எம். பி. ஏ. (அல்பருவ முறை)	56	30	53.57	18
எம். பி. பி. எஸ்	290	114	39.31	—
பி. பார்ம்	17	13	76.47	—
பி. எஸ். எம் & எஸ்	19	14	68.62	—
எம். டி	92	21	22.82	—
எம். எஸ்	43	16	37.20	—
எம். சி. எச்	9	7	77.77	—
பி இ. (பருவ முறை)				
பொது மராமத்து	299	212	70.90	210
மின்சாரம் & மின்னியல்	84	52	73 52	23
மின்னியல் & பரிமாற்றம்	90	71	78.88	71
இயந்திரவியல்	173	128	75.14	130
பி. இடி. (பருவ முறை)	970	872	89.89	60
பி. இடி. (அல்பருவ முறை)	1030	520	50.48	68
எம். இடி. (பருவ முறை)	14	12	85.71	11
எம். இடி. (அல்பருவ முறை)	1121	457	40.76	57
பி. பி. இடி (பருவ முறை)	102	96	94.11	28
எம். பி. இடி (அல்பருவ முறை)	26	26	100.00	13
பி. எல். ஐ. சயி	37	37	100.00	5
எம். எல். ஐ. சயி	6	6	100.00	4
சான்றிதழ்ப் படிப்புகள்	1337	231	17.28	96
மேற்சான்றிதழ்ப் படிப்புகள்	413	228	55.21	145

பட்டமளிப்பு விழா

புது தில்லி, திட்டக்குழு உறுப்பினரும் பிரதம மந்திரியின் அறிவியல் ஆலோசகரும் ஆகிய பேராசிரியர் எம் ஜி. கே. மேனன். எஃப். ஆர். எஸ். பத்தொன்பதாவது பட்டமளிப்புவிழாப் பேருரை நிகழ்த்தினார். இளம் பட்டதாரிகட்குப் பெருஞ்சிக்கல்களும் சவால்களும் நிறைந்த - ஆனால் கனவிலும் நினைத்துப் பார்க்காத வாய்ப்புகள் நிறைந்து அவர்கள் அடியெடுத்துவைக்க இருக்கிற ஓர் உலகத்தைப்பற்றி விடுத்த செய்தியாக-முழுமையானதாக - அஃது அமைந்தது. புகழ்பெற்ற இவ்வறிவியலறிஞர் மக்கள் தொகை, சுற்றுச்சூழல், உயிரினச்சூழல், உணவு, விவசாயம், வேலைவாய்ப்பு, ஆற்றல் ஆகியவற்றோடு தொடர்புற்றநிலையில் சிக்கல்களின் பரிமாணத்தையும் பன்முகத்தன்மையினையும் குறிப்பிட்டு இத்தகு சவால்களைச் சந்திக்க அறிவியல், தொழில்நுட்பவியல், கல்வி, பெருமளவிலான சமுதாயத்தின் ஈடுபாடு ஆகியவற்றின் பங்குபற்றிய நுண்ணிய ஆய்வினை மேற்கொண்டார். விடுதலைபெற்ற நாளிலிருந்து அணுயுகம், மின்னியல், தகவலியல்யுகம், புதிய உயிரியல் யுகம் என நாம் பல காலகட்டங்களைச் சந்தித்துள்ளோம். விவசாய உற்பத்தியை மிகுவிக்கவும் , நம்மைத் துன்புறுத்தும் பல நோய்களைக் களையவும் சமுதாய நலத்தை மேம்படுத்தவும் மக்கட்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவும் இதுகாறும் சிக்கலான வேதியியல் வழிமுறைகளில் செய்து வந்த பல்வேறு தொழிலகப்பொருட்களை உற்பத்தி செய்யவும் புதிய உயிரியலில் விளைந்துள்ள புதிய வளர்ச்சிகளைப் பயன்படுத்த வேண்டிய உடனடித் தேவையைக் கோடிட்டுக் காட்டினார்.

தமது உரையின் இரண்டாம் பகுதியில் பேராசிரியர் மேனன் கல்வி பற்றியும் அதில் நமது பொறுப்புக்கள் பற்றியும் கருத்துச் செலுத்தினார். முதன்மையானதும் தலைமையானதுமான தேவை நிச்சயமாகப் பள்ளிக்கல்வியைப் பரவலாக்குவதும் சனநாயகப்படுத்துவதுமாகும். உலகமெல்லாம் நாடுகள் தங்கள் கல்விக்கோடுபாடுகள் காலாவதியாகிவிட்டமையைக்கண்டுவருவதால் நாம்முறைசாராக் கல்விக்கும் பகுதி நேரக் கல்விக்கும் கணிசமான இடத்தைத் தருவதன் வழி வேகத்தைத் துரிதப்படுத்தவும் தன்மையை மாற்றவும் ஒரு புதிய கல்வி முறையினை உருவாக்கவும் வேண்டியவர்களாக இருக்கிறோம். கல்வி என்பது நாடு முழுமையும் அக்கறை கொண்டுள்ள ஒன்றாதலின் மக்களினம் அனைத்தும் அதன் திட்டங்களில் ஈடுபட்டிருப்பதோடு அதன் கோட்பாடுகளில் கருத்தூன்றியும் இருத்தல் வேண்டும். கல்வி கற்றோரின் தலையாய பொறுப்பு சமுதாயத்தை ஈடுபடுத்துவதற்கான ஒரு சூழலை உருவாக்குவதாகும். கல்வி - இதுவொன்றே அகவலிவைக் கொடுப்பதாகலின் - சரியான மதிப்பீட்டமைப்பினை உருவாக்குதல் வேண்டும். இந்தியாவைப் போன்றதொரு நாடு தன்னுடைய அறிவு, பண்பாட்டுப் பாரம்பரியங்களோடு அறிவியல் வளர்ச்சிகளிலும் முழுமையாகப் பங்கேற்க வேண்டும்.

அறிவு சான்ற இப்பேருரை நாம் ஒவ்வொருவரும் நமக்கு முன் இருக்கும் சவால்களை வெற்றிகரமாகச் சந்திக்கும் வகையில் நம்மாலானதைச் செய்ய இயலும் என்ற நம்பிக்கையோடு நிறைவு பெற்றது.

வரையறைகளும் நிலைச் சட்டங்களும்

இவ்யாண்டில் ஆட்சிப்பேரவை, கல்விப்பேரவைக் கூட்டங்களில் நிறைவேற்றப் பெற்ற பல்கலைக் கழக நிலைச்சட்டங்கள் வரையறைகட்கான திருத்தங்கள் பின்னிணைப்பு 'H'இல் தரப்பெற்றுள்ளன.

இயல் III
ஆய்வு நடவடிக்கைகள்

